இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

O.S. 98/2015

Date :16.02.2026

வா.சா. 1 செந்தில் மணி

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.

**1,2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**.

வழக்கு பட்டிகை சொத்தின் வீட்டின் கதவு எண் என்ன என்றால் 17/100. மேற்படி வீட்டின் வீட்டு வரி தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் 3 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் பழைய கதவு எண் 17/26 கொண்ட சொத்துவரி ரசீது 3 ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். **மேற்படி சொத்து வரி ரசீது பிவாசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் 11.02.2014 ல் 3 ம் பிரதிவாதிக்கு பாக விடுதலை பத்திரம் காரணத்துடன் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்ன காரணம் என்றால் வரதட்சணைக்காக கொடுக்க வேண்டி. 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்தின் பின்புறம் L வடிவில் மேற்கு வடக்காக ஒரு இடம் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி L வடிவிலான இடம் இருப்பதால் மேற்படி இடத்தை எனது சொத்திற்கும் ரோட்டிற்கும் நேரே எடுப்பதற்காக பொய்யாக ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியின் சொத்தை முறையே பணம் செலுத்தி அளவீடு செய்யப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் உட்பிரிவு செய்யப்படவில்லை. நான் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் சொத்து 1 ம் பிரதிவாதியின் சொத்தின் நேரே பின்புறம் உள்ளது என்றால் சரிதான். பின்புறம் மற்றும் வடக்கு பக்கமும்உள்ளது. மேற்படி ஆக்கிரமிப்பு இருந்தாலும் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு 3 ம் பிரதிவாதிக்கு தான்உரிமைஉள்ளதுஎன்றால்சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்து எனது அனுபவத்தில் தற்போது இல்லை என்றால் சரியல்ல. வழக்குரை மற்றும்முதல்விசாரணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் ஒன்றோடு ஒன்று முரன்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல, வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியவ்வ. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதென்றால் சரியல்ல.

**1 மற்றும் 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பப்படுகிறது.**

**3 ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**